**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய விடுதிக் கட்டடங்களை இடித்துவிட்டு 19 புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ. 45,39,91,666/- மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – மொத்த மதிப்பீட்டில் 10% தொகையான ரூ.4,53,99,000/-ஐ முதற்கட்டமாக கட்டுமானத்திற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை**

அரசாணை (நிலை) எண்:48

நாள் : 28.05.2019
விகாரி வருடம்
வைகாசித் திங்கள் 14–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டவை:–

1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். த3/3692/2014, நாள். 03.09.2018.
2. அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆநிந.2) துறை, நாள். 06.03.2019.

------

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் பெறப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவின் அடிப்படையில், மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய விடுதிக் கட்டடங்களை இடித்துவிட்டு 19 புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ. 45,39,91,666/- (ரூபாய் நாற்பத்து ஐந்து கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு மட்டும்) மதிப்பீட்டில் கட்டுவதற்கு கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது:-

| வ. எண். | விடுதியின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒரு விடுதியில் தங்கிப் பயிலும் மாணாக்கர் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல காந்திஜி மாணவர் விடுதி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் | 200 | 335.77 |

த.பி.பா

| | | | |
|---|---|---|---|
| 2. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, நாகப்பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 3. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 4. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 5. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, திருமருகல், நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 6. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 7. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 8. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 9. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 131.72 |
| 10 | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, கொம்புக்காரனேந்தல், சிவகங்கை மாவட்டம் | 50 | 131.72 |
| 11. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி,தேவக்கோட்டை–1. சிவகங்கை மாவட்டம் | 200 | 335.77 |
| 12. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, துறையூர், திருச்சி மாவட்டம் | 100 | 244.41 |
| 13. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி, தர்மபுரி மாவட்டம் | 400 | 645.60 |

த.பி.பா.

| | | | |
|---|---|---|---|
| 14. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, கடவூர், கரூர் மாவட்டம் | 100 | 244.41 |
| 15. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, தாந்தோணிமலை, கரூர் மாவட்டம் | 100 | 244.41 |
| 16. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் | 200 | 335.77 |
| 17. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் | 200 | 388.12 |
| 18. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, போஜனபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் | 200 | 335.77 |
| 19. | ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதி, பந்தநல்லூர், தஞ்சாவூர் மாவட்டம் | 100 | 244.41 |
| **மொத்தம்** | | | **4539.92** |

2. மேலே, நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.45,39,91,666/-இல், 10% தொகையான ரூ.4,53,99,000/-ஐ (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரம் மட்டும்) முதற்கட்டமாக கட்டுமானத்திற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு நிதி ஒப்பளிப்பு செய்து, அரசு ஆணையிடுகிறது. மீதமுள்ள தொகையினை பணி முன்னேற்ற அறிக்கையின் அடிப்படையில் விடுவிப்பு செய்யப்படுவதற்கு ஏதுவாக, தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2019–2020–ஆம் நிதியாண்டில் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. மேலே பத்தி–2 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> “4225 –ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள், JA – ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுதல்–416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்
> (IFHRMS DPC 4225 01 277 JA 41601)
> (Old DPC 4225 01 277 JA 1603)”

த.பி.பா.

4. மேலே குறிப்பிட்டுள்ள பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே பத்தி –2 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கட்டுமானப் பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இத்தொகையினை பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

> "K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00– உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள்"
>
> (த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)
> (த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

6. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியை விரைவாக செயல்படுத்துதல் மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுத் துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வரவு–செலவு பொது-I)த் துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி(வரவு–செலவு பொது-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலன், சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2019–20 ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதித் (ஆதி(ம)பந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் ஆதிதிராவிடர் நலன், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

த.பி.பா.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.15814/ஆதி(ம)பந/2019, நாள். 02.05.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 102 (நூற்று இரண்டு)–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர்,
மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர்,
நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி,
கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர்,
மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தர்மபுரி, கரூர், நீலகிரி,
கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந/ வ.செ.பொ–I)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின்
முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ ஆதிந.4 /ஆதிந.5) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்